எண்ணற்ற மாணவர் விடுதிகளைப் புதிதாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டக்கூடியது. அதேசமயத்தில், கட்டப்பட்டிருக்கக்கூடிய மாணவர் விடுதிகள் பராமரிக்கப்படாத காரணத்தினாலே, அவை பார்ப்பதற்குக்கூட முடியாத அளவிற்கு மிகவும் மோசமாக இருக்கின்றன. எனவே, இந்த மாணவர் விடுதிகளைப் பராமரிப்பதற்கென்று ஆண்டுதோறும் ஏதாவது நிதி ஒதுக்கப்படுகிறதா? அப்படி, நிதி ஒதுக்கப்படின், அந்தப் பராமரிப்புப் பணி எந்தத் துறையின்கீழ் செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு, 5 ஆண்டுகளாக மாணவர் விடுதிகளைப் பராமரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 73.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில், (மேசையைத் தட்டும் ஒலி) 1,059 மாணவர் விடுதிகளைப் பராமரிக்க ஆணையிட்டுள்ளார்கள். அந்தப் பராமரிப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த விடுதி பராமரிக்கப்படாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அந்த விடுதி நிச்சயமாக இந்த ஆண்டில் எடுத்து பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

175—

குளிர்சாதனக் கிடங்கு

***4935—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடற்கரை மீனவ கிராமங்களில் மீன்களைப் பாதுகாக்க குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2012 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஏழு மீனவ கிராமங்களில் விசைப் படகுகள்மூலம் மீன்பிடித்தல் எதுவும் நடைபெறவில்லை. பாரம்பரிய மீன்பிடிக் கலன்கள்மூலம் மட்டும்தான் மீன்பிடித்தல் நடைபெற்று வருகிறது. மீனவர்கள் பிடிக்கும் மீன்கள் அருகிலுள்ள நகரங்களான திருநெல்வேலி, ராதாபுரம், வள்ளியூர், நாகர்கோவில் போன்ற இடங்களுக்கு TATA ACE போன்ற வண்டிகள்மூலமும், உள்ளூர் சந்தைகளுக்கு மிதிவண்டி வியாபாரிகள்மூலமும் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அண்டை மாநிலமான கேரளாவிற்கு அதிகமான மீன்கள் தேவைப்படுவதால், பிடிக்கப்பட்ட நல்ல தரம் வாய்ந்த மீன்கள் பனிக்கட்டியில் வைத்து, சந்தைக்கு லாரிகள்மூலம் அனுப்பப்படுகின்றன. எனவே, இதுகுறித்து ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும்தான் கடற்கரைக் கிராமங்கள் உள்ளன. எனது தொகுதிக்குட்பட்ட மீனவர்கள் பிடிக்கும் மீன்கள் பெரும்பாலும் அண்டை மாநிலமான கேரளாவைச் சேர்ந்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகின்றன. கேரள மாநிலத்தில் அதிக மீன்வரத்துக் காலங்களிலும், இந்த மீனவக் கிராமங்களில் அதிக மீன்வரத்துக் காலங்களிலும் மீன்களைக் குறைந்த விலைக்கே கேரள வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். எனவே, இப்படிப்பட்ட நேரங்களில் பிடித்து வரும் மீன்கள் கெட்டுப்போகாமல் பாதுகாத்திட குளிர்பதனக் கிடங்கு ஏதும் இல்லாத காரணத்தினால், மொத்த வியாபாரிகள் மற்றும் இடைத் தரகர்கள் கேட்கின்ற விலைக்கே கொடுக்கும் நிலைக்கு மீனவர்கள் தள்ளப்படுகின்றனர்.

2012–2013 ஆம் ஆண்டில் மீன் வளத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில், தமிழகத்திலுள்ள கடலோரக் கிராமங்களில் பொதுத் துறை மற்றும் தனியார் கூட்டு முயற்சியோடு

உட்கட்டமைப்பு வசதிகளான மீன் பதனிடும் பூங்காக்கள் முதற்கட்டமாக, சென்னை, கடலூர், நாகப்பட்டினம் போன்ற இடங்களில் மட்டும் அமைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எங்கு அமைக்க வேண்டுமோ அதை மட்டும் கேளுங்கள். அதைவிடுத்து, ஊரெல்லாம் சுற்றி வருவதற்கான நேரமா இது? கேள்வி நேரத்தில், எந்த இடத்தில் குளிர்சாதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டுக் கேளுங்கள்.

முற்பகல் 10–35

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரிய மீன்பிடிக் கலன்கள்மூலம் மீன்பிடித் தொழில் செய்து வரும் இந்தக் கிராமங்களில், பிடித்து வரும் அந்த மீன்களுக்கு, எல்லாக் காலங்களிலும் நல்ல உரிய விலை கிடைத்து பயன்பெறும் வண்ணம், முன்னுரிமை அடிப்படையில் இந்த நடப்பாண்டிலேயே மீன் குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஏழு மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அதில் 1,201 நாட்டுப் படகுகளை வைத்து மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதிலே வரக்கூடிய மீன்கள், பெறப்படுகின்ற மீன்களெல்லாம் அண்டை மாநிலமான கேரளாவிற்கும், திருநெல்வேலி, நாகர்கோவில், ராதாபுரம் போன்ற நகரங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. மீதமுள்ள மீன்களைக்கூட சைக்கிள் வியாபாரிகள் எடுத்துச்செல்கிறார்கள். அங்கு மீன் வியாபாரம் செய்யும் பெண்களுக்குக்கூட, தொடர்ந்து மீன் கிடைப்பதில்லை என்ற செய்தியும் வருகின்றது. ஆகையினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உவரி மற்றும் பெரியதாளையில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதிலே இத்தகைய வசதி செய்யப்பட இருக்கிறது. ஆக, அருகில் இருக்கிற அந்த பெரியதாளை கிராமத்திற்கு கூடுதலாக மீன் வருகின்ற சமயத்தில், அதாவது விலை போகாத சமயத்தில்,

2012 ஏப்ரல் 26]

அப்படிப்பட்ட அந்த வசதிகளைப் பயன்படுத்தி பயன் பெறலாம். மேலும் உறுப்பினர் சொல்கின்ற Fish Processing Parks–மீன் பூங்காக்களை 13 மாவட்டங்களில் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இன்றைக்கு சென்னை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய கடற்கரை மாவட்டங்களில் பணிகள் நடைபெற இருக்கின்றன. உங்களுடைய பகுதி குறைந்த அளவு மீன் வரக்கூடிய பகுதி. உள்ளூர் தேவைக்கே மீன் போதவில்லை. ஆக, மீன் அதிகமாக வரக்கூடிய சமயத்தில், மீன் விலை போகவில்லை என்று சொன்னால், அருகிலுள்ள உவரி, பெரியதாளையில் மீன் இறங்கு தளம் அமைய இருக்கின்றது; அதில் இந்த வசதிகள் எல்லாம் வர இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கிள்ளியூர் தொகுதியில் உள்ள மொத்த கிராமங்களும் கடற்கரைக் கிராமங்களாக இருக்கின்றன. தேங்காய்ப்பட்டினத்திலே இப்போது மீன்பிடித் துறைமுகம் வருகிறது, வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன, அது முடியும் தருவாயில் உள்ளது. ஆகையால், அங்குள்ள ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு அதிகமான மீனவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் பிடிக்கும் மீன்களைப் பதப்படுத்தி வைக்க ஒரு பதப்படுத்தும் நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைமுகம் அமைத்த பின்பு, அந்தப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அதிகப்படியான மீன்கள் வரப்பெற்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனத்தில் கொண்டு, ஆராய்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், நான்கு படகுகள் எடுத்துச் சென்று அதிகமான அளவு மீன்களைப் பிடித்து சேர்த்து வையுங்கள்.*

வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

176—

தரம் உயர்த்துதல்

3998—திரு. அ. சவுந்தரராசன்:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி, சர்மா நகரிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் தொகுதி, சர்மா நகரிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கருத்துரு எதுவுமில்லை. தற்போது வாய்ப்புமில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏறக்குறைய 15 மாண்புமிகு உறுப்பினர்கள் கையை உயர்த்தி துணைக் கேள்வி கேட்க அனுமதி கோரியுள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் வாய்ப்புத் தர*